செ.வெ.எண்.483/2017 நாள் - 02.10.2017

# பத்திரிக்கை செய்தி.

**காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், வல்லக்கோட்டை ஊராட்சியில் காந்தி ஜெயந்தியன்று கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா. பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் கிராம சபை கூட்டங்கள் ஊராட்சிகள் தோறும் வருடத்தில் நான்கு முறை நடைபெறுகிறது. நடைபெற்ற பணிகள் குறித்து எடுத்து சொல்வது மட்டுமின்றி அடுத்த கட்டமாக நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் விவாதிக்கப்படுகிறது. கிராம வளம் மற்றும் 'தூய்மைக்கான இருவார இயக்கம் தற்போது அக்டோபர் 1-ம் தேதிமுதல் 15-ம் தேதிவரை நடைபெறுகிறது. ஏற்கனவே தூய்மையே சேவை இயக்கம் தொடங்கப்பட்டு முடிவடைந்த நிலையில் தற்போது தூய்மைக்கான மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் பட்டியலிடப்பட்டு தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமின்றி இங்குள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குதல் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொளள நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் பொது மக்கள் தங்களது கோரிக்கைகளை இஙகு தெரிவிக்கப்பட்டு அதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படும். தற்போது வல்லக்கோட்டை கோயிலை சுற்றியுள்ள நான்கு 'வீதிகளில் சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். அவற்றிக்கு இணைப்பு சாலை அமைக்கப்படும். மேலும் பொது மக்களின் கோரிக்கைகள் தொடர்ந்து நிறைவேற்றித் தரப்படும்.'ஏற்கனவே இக்கிராமம் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத ஊராட்சியாக உள்ளது. மேலும் ஆண்கள் மற்றும் பெண்கள் சுகாதார வளாகங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறது. இங்கு மகளிர் குழுவினர் சமையல் பயிற்சி பெற்று தொடர்ந்து சமையல் மூலம் தொழில் புரிய ஷெட் அமைத்துதர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர். இக்கோரிக்கை உடனடியாக நிறைவேற்றிதர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

முன்னதாக தூய்மைக்கான இருவார சேவை இயக்கத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் குப்பை அகற்றும் பணியினை துவங்கியதுடன் தூய்மைக்கான உறுதி மொழியினை கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பொது மக்கள் ஏற்றனர்.

இந்நிகழ்ச்சியில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பழனி , உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.கங்காதாரணி, முதனமை கல்வி அலுவலர் திரு.திருவளர்ச்செல்வி, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.வி.டி.லீமாரோஸ் மற்றும் திருமதி. கோ. பங்கையற்செல்வி, வட்டாச்சியர் திரு.ரமேஷ் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சீதா.சீனிவாசன், சிவ.பானுமதி இரா.ஏழுமலை மற்றும் ஊராட்சி செயலர் திரு. சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.